3. கவன ஈர்ப்பு.

(அ) வேலூரில் உள்ள அனைத்து நீதிமன்றக் கட்டிடங்களும் இடிந்துவிடும் நிலையில் உள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசர பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள அனைத்து நீதிமன்ற கட்டிடங் களும் இடிந்து விடும் நிலையில் உள்ளது குறித்து" மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஒரு விரிவான, விளக்கமான அறிக்கையை இந்த மாமன்றத்தில் வைக்கிறேன்.

அறிக்கை.

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூரிலுள்ள ஏழு நீதிமன்றங்கள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குச் சொந்தமான கோட்டையில் உள்ள கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அவை பொதுப் பணித்துறையினரால் பரா மரிக்கப்பட்டு வருகின்றன. அக்கட்டிடங்கள் பொதுவாக திருப்தியான நிலைமையில் உள்ளன. வேலூரிலுள்ள சத்து வாச்சாரியில் ஒருங்கிணைந்த நீதி மன்றக் கட்டிடங்கள் கட்டுவ தற்காக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் இருந்து சத்துவாச் சாரி குடியிருப்புக் காலனியில் இருந்து 10.22 ஏக்கர் நிலத்தை ரூ.9.3 இலட்சத்திற்கு வாங்குவதற்கு அரசு ஆணை எண். 1565, உள்துறை, நாள் 3-6-1980-ல் அனுமதி வழங்கியது. மேலும் அரசாணை எண். 2077, உள்துறை, நாள் 4-10-1983-ல் மனையின் சொந்தக்காரர்களுக்கு கூடுதல் ஈட்டுத் தொகை கொடுப்பதற்கு ரூ.5.11 இலட்சத்திற்கு அரசாணை எண். 1565, உள்துறை, நாள் 3-6-1980-ல் அனுமதிக்கப்பட்ட தொகையான ரூ.9.30 இலட்சத்தை விட கூடுதலாக செலவழிக்க ஒப்புதல் அளிக்கப் பட்டது. மேற்படி நிலத்தில் 9.06 ஏக்கர் நிலம் நீதிமன்றங்கள் கட்ட ஏற்கனவே பொதுப் பணித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. எஞ்சியுள்ள 1.16 ஏக்கர் குட்டைப் புறம்போக்கு நிலம் நீர் வழி

புறம்போக்காக உள்ளதால் வீட்டு வசதி வாரியம் மூலமாக நீதித் துறைக்கு நில மாற்றம் செய்ய சென்னை, சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர், வருவாய்த் துறைக்கு பரிந்துரை செய்துள்ளார். மேற்படி நேர்வு வருவாய்த் துறையின் ஆய்விலுள்ளது.

2. சென்னை உயர் நீதிமன்றம் 1988–ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்களில் மேற்படி சத்துவாச்சாரி கிராமத்தில் 10.22 ஏக்கர் நிலத்தில் எல்லா நீதிமன்றங்களும் ஒரே இடத்தில் சேர்ந்து இயங்குவதற்காக ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் (Construction of Combined Court Buildings) கட்ட ரூ.3.44 கோடி மதிப்பீட்டில் வரைபடத்தையும், மதிப்பீட்டையும் அரசின் ஏற்பிற்கு அனுப்பியது. அரசு அதைப் பரிசிலித்தது. 1988 ஆம் ஆண்டு, நவம்பர் திங்களில் நீதித் துறையில் இம்மாதிரியான ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவது குறித்த நேர்வின் வரைபடத்தையும், மதிப்பீட்டையும் (Plan & Estimate) ஏற்பதற்காக அரசு பரிசீலனை செய்து மாநிலத்திலுள்ள அனைத்து நீதிமன்றங்களும் ஒரே மாதிரியாக கட்டப்பட வேண்டுமென்றும், அதற்கேற்ப நிலையான மாதிரி வரைபடம் (Standard Type Design) தயாரிக்க வேண்டுமென்றும் முடிவெடுத்தது. மேற்படி முடிவின்படி, வேலூர் சத்துவாச்சாரி கிராமத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்ட மாதிரி வரைபடங்கள் அனுப்பும்படி உயர் நீதிமன்றத்திடம் 1988 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்களில் கேட்டுக் கொள்ளப்பட்டது. உயர் நீதிமன்றம் 6-9-1991 நாளிட்ட கடிதத்தில் அரசு பரிந்துரையின்பேரில் ஒரே மாதிரியான நிலையான மாதிரி வரைபடம் தயாரிக்கும் நேர்வின்மீது உயர் நீதிமன்றம் இறுதி முடிவு எடுத்த பின் சத்துவாச்சாரியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்ட அரசிற்கு செயற்குறிப்பு அனுப்புவதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. உயர் நீதிமன்றத்திடமிருந்து ஒரே மாதிரியான திருத்திய வரைபடமும், மதிப்பீடுகளும் வந்த பின்னர் வேலூரிலுள்ள சத்துவாச்சாரி கிராமத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசின் நிதி நிலைக்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் 1980 ஆம் ஆண்டு வேலூரில் வடாற்காடு மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து சுமார் 10 ஏக்கர் 22 சென்ட் நிலத்தை நீதிமன்ற வளாகம் கட்டுவதற்காக அன்றைக்கே வாங்கி வைத்திருந்தார்கள். இன்றுவரையில் அந்த இடத்தில் நீதிமன்ற கட்டிடம் கட்டுவதற்கு அரசு எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை. பலமுறை நான் வழக்கறிஞர்கள் தலைவனாக இருந்து இதை முன்பு திராவிட முன்னேற்ற கழக முதலமைச்

1991 செப்டம்பர் 23] [திரு. சி. ஞானசேகரன்]

சருக்கு மனுவைத் தந்திருக்கிறேன். அவர் 1990 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை திறந்துவைக்க வந்தபோது வேலூர் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவனாக இருந்த நான உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்து விட்டு, அவர் வருகிற வேளையில் உண்ணாவிரதம் இருப்பதாக அறிவிக்கிற நேரததில், அங்கேயிருக்கிற போலீஸ் அதிகாரிகளும், ரெவின்யூ அதிகாரிகளும் வந்து உடன்பாடு ஏற்படுத்தி நாங்கள் கட்டித் தருகிறோம் என்று அழைத்துச் சென்று முதலமைச்சரிடம் பேசச் சொன்னார்கள்.

முற்பகல் 10-10

பேசினேன். அப்போது, இதற்கு முன்னாலே எல்லாம் நீங்கள் கேட்காமல் விட்டுவிட்டு, நான் இருக்கும்போதுமட்டும் வந்து கேட்கிறீர்களே, நான் என்ன** என்று..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் இதிலே கேள்விதான் கேட்கலாம் என்பது உங்களுக்குத் தெரியும். ஏராளமான கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிற உறுப்பினர் நீங்கள். இதிலே துணைக் கேள்விகளைப் போடுவது என்பதற்குப் பதிலாக நீங்கள் விரிவாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அந்த அளவிற்கு பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தால்தான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விதான் வரும். பிரச்சினை அல்ல.

திரு. சி. ஞானசேகரன் : அனைத்து நீதிமன்றங்களும் இப்போது இடிந்து விழக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. அனைத்தும் தொல்பொருள் ஆராய்ச்சித்துறைக்கு சம்பந்தப்பட்ட வளாகத்தில் இருந்து கொண்டு இருக்கின்றன. இந்த அறிக்கையில் 7 நீதிமன்றங்கள் இருப்பதாக சட்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் 12 நீதிமன்றங்கள் அந்த இடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கே வழக்கறிஞர்கள் சரிவர வழக்குகளைக் கூட நடத்த முடியாத அளவிற்கு, வவ்வால்கள் பறந்துகொண்டும், மேலே திடீர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திடீர் என்று சுண்ணாம்புத்தூள்கள் தலையின் மேலே விழுந்து கொண்டுமிருக்கின்றன. ஒரு முறை ஹைக்கோர்ட் நீதிபதி அவர்கள் இன்ஸ்பெக்சன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாவாகக் கேட்க வேண்டாமா. நீங்கள் பேசிவிட்டு உட்கார்ந்து விடுகிறீர்களா? கேள்வி கேட்டால் தான் அமைச்சர் பதில் சொல்லலாம். நீங்களே பேசிக்கொண்டு இருந்தால், பேசிவிட்டு உட்கார்ந்து விடலாம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் வழக்கறிஞர் சங்கம் உடனடியாக நீதி மன்ற கட்டிடத்தை கட்ட வேண்டிய நிலையை குறித்தும், இந்த அரசை வற்புறுத்தியும், அவர்கள் நீதிமன்றங்களைப் புறக் கணித்து இருப்பதாக தீர்மானத்தை இயற்றியிருக்கிறார்கள். நீதி மன்றங்கள் இப்போது இடிந்து விழக்கூடிய கட்டிடங்களில் செயல்பட்டுக் கொண்டிருப்பதாலே, இன்று வழக்கறிஞர்கள் மிகவும் அவஸ்தைக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, புரட்சித் தலைவர் அவர்கள் வாங்கி வைத்திருக்கிற 10 ஏக்கர் 22 சென்ட் நிலத்தில், மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், உடனடியாக அந்த இடத்திலே கோர்ட்டுக்களைக் கட்டித் தருவார்களா என்ற வேண்டுகோளை முன்னாலே வைத்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞான சேகரன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, இன்றைக்கு வேலூரிலே மூன்று கோடியே 44 லட்சம் ரூபாயை உள்ளடக்கி, 'கன்ஸ்ட்ரக்சன் ஆப் கம்பைன்ட் கோர்ட் பில்டிங்ஸ்' என்ற வகையில், ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடங்களை சத்து வாச்சாரி வளாகத்திலே உருவாக்க அரசு ஏற்கெனவே முடிவு எடுத்திருந்தது. அதிலே இரண்டு சங்கடங்கள் இருந்தன. ஒன்று, அதற்கு உரிய ஒதுக்கப்பெற்ற, 10 ஏக்கர் 22 சென்ட்டில், 9 ஏக்கர் 6 சென்ட் ஹவுசிங் போர்டுக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தால், அது கையகப்படுத்தப்பட்டது. மீதி 1 ஏக்கர் 16 சென்ட் வருவாய்த்துறையிலே இருந்தது. கடந்த 11-9-1991-ஆம் நாள், இன்றைக்கு 13 நாட்களுக்கு முன்பாக வருவாய்த்துறை ஆணையிட்டு, டிரான்ஸ்பர் புரப்போசலை மாவட்ட ஆட்சி தலைவருக்கு அனுப்பியிருக்கிறது. அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். ஆகவே நிலத்தைப் பொறுத்தவரையிலே, எனி பிரச்சினை இருக்காது.

1991 செப்டம்பர் 23] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

அடுத்து, கட்டிடங்களைப் பற்றி, இன்றைக்கு உயர்நீதி மன்றம் மாவட்டத் தலைநகரங்களிலே அமைகின்ற நீதிமன்றங்கள் அனைத்தும் ஸ்டான்டர்ட் டைப் டிசைன் என்ற ஒரு நிலையான மாதிரி வரைப்படத்தைப் போலவே இருக்க வேண்டும் என்று கேட்டு கொண்ட காரணத்தினாலே, கடந்த 17 ஆம் தேதி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆணைக்கிணங்க, உயர்நீதிமன்ற நீதிபதியினுடைய சார்பாக, உயர்நீதிமன்றத்திலே பணியாற்றுகிற ரெஜிஸ்திரார் அவர்கள் அழைக்கப் பெற்று, கோட்டையில், உள்துறைச் செயலாளர், நிதியமைச்சர், நிதித்துறைச் செயலாளர், அவர்களோடு கலந்து, ஆலோசனை செய்து, விரைவாக, ஸ்டான்டர்ட் டைப் டிசைனை அவர்கள் தயாரித்து அனுப்ப உயர்நீதி மன்றத்தைக் கேட்டிருக்கிறோம். அது துரிதமாக வரும், ஆகவே, இந்த, ஸ்டான்டர்டு டைப்டிசைன் வந்த பிறகு— ஏற்கனவே நான் சொன்னதைப் போல, 11 ஆம் தேதி மீதியுள்ள அந்த 1 ஏக்கர் 16 சென்ட் வருவாய்த் துறையிலிருந்து பெறப்பெற்றிருக்கிறது, ஆகவே நிலப் பிரச்சினை இல்லை. இன்றைக்கு உயர் நீதிமன்றத்திலிருந்து ஸ்டான்டர்ட் டைப் டிசைனை எதிர்பார்க்கிறோம். இரண்டும் வந்த பிறகு— நிச்சயமாக சத்துவாச்சாரி வளாகத்தில், புதிய நீதிமன்றங்களுடைய பணி தொடங்கும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இப்போது நிலம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லிவிட்டார்கள். 1. ஏக்கர் 16 சென்ட் நிலத்தை ஸ்பெசல் கமிஷனர், லேன்ட் அட்மினிஸ்ட்ரேசன் அவர்கள் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்த பிறகு, 1988-லிருந்து இந்த ஸ்டான்டர்டு டைப் டிசைன் என்ற ஒரே காரணத்திற்காக 3 ஆண்டுகாலமாக அந்த வரைபடப் தயாரிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதையும் முடித்து, நிதி குறுக்கே வராமல் மாண்புமிகு, முதல்வர் அவர்கள் நிச்சயமாக அவர்கள் தொட்ட இடமெல்லாம் துலங்கும் அவர்கள் கால் பாதப்பட்ட இடங்கள் எல்லாம் நிச்சயமாக வளம் பொங்கும் என்பதற்கு இணங்க, உடனடியாக அடிக்கல்லையாவது இந்த ஆண்டில் நாட்டி, எங்களுடைய, வழக்கறிஞர்களுடைய குறையை அவர்கள் தீர்க்கவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.